www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 018

18 மே 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# விடுதலைவேள்வியில் ஆகுதியான அனைவருக்கும் வீரவணக்கம்




**“கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு”**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆட்களை வெருட்டி அறிக்கை விடும் தனம்

இலண்டனில் கே.பி அணியினரை பலப்படுத்தும் நடவடிக்கையில் தனம் மற்றும்  குணாளன் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகளை குறைகூறுவது மற்றும் தலைவரை விமர்சிப்பது, தேசியக்கொடியை புறக்கணிப்பது என தனம் தனது அடாவடித்தனத்தை தொடரும் இவ்வேளையில், முன்னர் தேசியத் தலைவருடன் தனம் குடும்பமாக நின்று படம் எடுத்திருந்ததை அவர் மறந்திருக்கமாட்டார். அப்படத்தை நாம் வெளியிட்டால் அவர் கம்பியெண்ணவேண்டி வரும் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

விடுதலைப் போரையும் தலைவரையும் விமர்சிக்கும் தகுதி யாருக்கும் இல்லை என்பதை காலம் அவர்களுக்கு உணர்த்தும். மாவீரர்களின் கல்லறைகள் மீதேறி தமது அரசியலை செய்ய முனையும் இவர்களுக்கு காலம் பதில் சொல்லும். இத்துடன் இணைப்பில் வருகின்ற ஒலிவடிவத்தைக் கேட்டால் தனமே தனது வாயால் வாக்குமூலம் கொடுத்திருப்பதை அறிந்து கொள்ளலாம். எனவே மக்களை இருபிளவாக்கி அரசியல் இலாபம் தேட முற்பட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**மேலும்,**
**இவர்களின் நடவடிக்கை தொடருமானால்...**
**இவர்கள் பற்றிய உண்மைகள் இன்னமும் வளரும்....**

# தலைவருக்கு திவசம் செய்ய மண்டபம் வேண்டுமாம்






தமிழீழ தேசியத்தலைவருக்கு உயிருடன் இருக்கும் போதே ஆண்டுத்திவசம் செய்வதற்கு பைத்தியம் பிடித்துள்ள அம்பலவாணரும், சுவிஸ் குலமும் மண்டபம் தேடி வருகின்றார்கள். விட்டால் இவர்கள் தங்களுக்கே திவசம் செய்வார்கள் போலுள்ளது. அண்மையில் தொடருந்து தண்டவாளத்தில் தற்கொலை செய்ய முயன்ற அம்பலவாணரை சுவிஸ் பிரஜைகள் காப்பாற்றி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் சுவிஸ் ஊடக இல்லம் என்ற பெயரில் இன்போதமிழ் என்ற பெயரில் உள்ள இணையத்தில் புலம்பிவருபவருவதும் இந்தப் பைத்தியம் அம்பலவாணர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இளங்கோ கையகப்படுத்த முனையும் பாரிஸ் முத்துமாரியம்மன் ஆலயம்







பாரிஸ் லாச்சப்பலில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகம் இளங்கோ மற்றும் மனோவின் குழுவினரால் கையகப்படுத்த முனையும் முயற்சிகள் நடைபெறுவதாக ஆலய நிர்வாக சபையில் உள்ள அதிருப்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். இளங்கோ மற்றும் மனோ மிக சாதுரியமாக இந்நடவடிக்கையை தமது அடியாட்களை வைத்து செய்வதாக அறியப்பட்டுள்ளது. பொது நிறுவனமாக இருந்த இந்த ஆலயம் தற்போது தனியார் சொத்தாக மாறவுள்ளது.

இளங்கோ, மனோ விரைவில் தொழிலதிபராக மாறும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. இளங்கோ தனது மாமனாரை கோவில் நிர்வாகியாக மாற்றுவதற்காக மும்முரமான காய்நகர்த்தலை செய்து வருகின்றார். களத்தில் போராடி விழுப்புண் பெற்ற நிலையிலும் தனது பணிகளை திறம்பட செய்து வந்த கஸ்ரோ அவர்களை இவர்கள் விமர்சிப்பது ஒன்றும் புதினமான விடயம் அல்ல. தமது தில்லுமுல்லுகளை தட்டிக்கேட்ட கஸ்ரோ, இவர்களின் எதிரியாகிவிட்டார். இயக்கத்தில் நண்பர்கள், உறவினர்கள், சுற்றத்தார் என பாகுபாடு பார்ப்பதில்லை. எல்லோரும் எங்கும் சமனானவர்களே. இச்சமன்பாட்டை புரிந்து கொள்ளாத இவர்கள் காட்டும் நரித்தனமே அவர்களின் செயல். இவர்களின் செயல்கள் தோலுரித்துக்காட்டும் காலம் விரைவில் மக்கள் மத்தியில் உருவாகும்.

**இன்னும் வரும்...**